இணைப்பு I

[16-ம் பக்கத்தில் வெள்ளிக் குறியிட்ட வினு எண் 531-க்கான விடையைக் காண்க.]

விடை :—

(அ) 1971–72 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன் விபரங்கள் :—

எல்லாபுரம் நிலவள ..	ரூ. 10,26.419 (பத்து லட்சத்து இருபத்தி ஆருயிரத்து நானூற்றி த்தொன்பது.)
கும்மிடிபூண்டி நிலவள வங்	0,00,942 ஆ லட்சத்து தொள் ாயிரத்து நாற்பத்தி ரெண்டு)

(இ) எல்லாபுரம் நிலவள வங்கி.—எல்லாபுரம் நிலவள வங்கி 1972–73-க்கு, நிர்ணயிக்கப்பட்டுள்ள கடன் வழங்கு குறியீடு ரூ. 20,00,000. இதில் 28–2–1973 முடிய ரூ. 3.35 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மின்சார மோட்டார், டவுனுடன் (down) கூடிய 500 குழாய் கிணறுகள் அமைக்க இந்த வங்கிக்கு கீழ்நீர் இயக்குனர் Director of Ground-water அவர்களின் அனுமதி கிடைத்துள்ளது. ஆகவே மேற்படி 500 குழாய் கிணறுகளுக்குக் கடன் வழங்க கடன் மனுக்கள் சேகரிக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. கும்மிடிப்பூண்டி.—1972–73 ஆம் ஆண்டிற்கு கும்மிடிப் பூண்டி நிலவள வங்கி கடன் வழங்குவதற்கு ரூ. 20.00 லட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வங்கியில் 865 ‘ஏ’ வகுப்பு அங்கத்தினர்களும், 972 ‘பி’ வகுப்பு அங்கத்தினர்களும் உள்ளனர். இவர்கள் பங்குத் தொகையாக ரூ. 1,31,612 செலுத்தி யுள்ளனர். இதில் அரசு செலுத்தியுள்ள பங்குத் தொகை ரூ. 25,000-மும் அடங்கும்.

வங்கியில் கூட்டுறவுத் துறை முதுநிலை ஆய்வாளர் ஒருவர் மேலாளராகப் பணிபுரிகிருர். தற்போது மெம்பர்களின் கடன் பாக்கி ரூ. 16 லட்சம் உள்ளது. இது ரூ. 20 லட்சத்தை

1973 மார்ச் 27]

அடைந்தவுடன் கூட்டுறவு சார் பதிவாளர் ஒருவரை மேலாளராகப் பணியில் அமர்த்தத் திட்டமிட்டுள்ளது. வங்கி அலுவலகர்கள் மற்றும் கூட்டுறவு சார் பதிவாளர் (நிலவள வங்கிகள்), கும்மிடிப்பூண்டி, கடன் மனுக்கள் சேகரித்து பரிசீலனை செய்து, விரைவில் கடன் வழங்கத்தக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாண்டில் 28—2—1973 முடிய இந்த வங்கி ரூ. 6.16 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

இணைப்பு II

[31-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மானியக் கோரிக்கை 21—கால்நடை வளர்ப்பு—கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சித் துறைகள்.

73–74 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 5,26,59,700

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை எண் 21—கால்நடை வளர்ப்புத் துறையின்கீழ் ரூ. 5,26,59,700-க்கு மேற்படாத ஒரு தொகையை அரசிற்கு வழங்குமாறு இப்பேரவையை வேண்டிக் கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்புத் துறையின் முக்கியக் குறிக்கோள் கறவை மாடுகள், ஆடுகள், பன்றிகள், கோழிகள் உட்பட கால்நடைச் செல்வத்தைப் பயனும் வளமும் மிகும் வகையில் பெருக்குவதாகும். இக்குறிக்கோள் நிறைவேற, கால்நடைகளில் கலப்பு இனம் பெருகச் செய்வதிலும், கால்நடைகளைப் பேணுவதிலும் அவற்றிற்குத் தீவனமும், இரையும் வழங்குவதிலும் புதிய அறிவியல் முறைகள் பின்பற்றப்படும். மேலும், கால்நடை நோய்களைத் தடுக்கவும், அவற்றிற்கு சிகிச்சை அளிக்கவும், உரிய வசதிகள், அனைத்தும் செய்து தரப்படும். இந்த நோக்கத்துடன் பணியாற்றும் கால்நடை வளர்ப்புத் துறை நடவடிக்கைகளின் இறுதிக் குறிக்கோள், நமது மாநிலத்திலுள்ள இழுவை மாடுகளின் ஆற்றலை உயர்த்துவதும், நமது மாநில மக்கள் உடல் நலனும், வலிமையும் உடையவராகத் திகழ அவர்களுக்கு உயரிய சத்துக்களடங்கிய உணவை போதுமான அளவு கிடைக்கச் செய்ய, பால் பொருட்களின் உற்பத்தி, முட்டை, இறைச்சி, கோழி இறைச்சி, பன்றி இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி மக்களுக்கு வழங்குவதுமாகும்.